பாடம் 4 ஏப்ரல் 16-22

# ஜலப்பிரளயம்



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 6:13–7:10; 2பேதுரு 2:5–9; ஆதி 7; ரோமர் 6:1–6; சங் 106:4; ஆதி 8; ஆதி 9:1–17.

**மனன வசனம்:** 'நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்'. மத் 24:37.

'மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார்'. ஆதி 6:5. 'கண்டார்' என்பதற்கான வினைச்சொல், தேவன் சிருஷ்டிப்பின் போது செய்த ஒன்றை ஞாபகப்படுத்துகிறது. ஆதி 6:5; அங்கே 'நல்லது' என்று கண்டார். நல்லது என்பதற்கான எபிரெயச் சொல் **டவ்**. இங்கே 'பொல்லாதது' என்று கண்டார். பொல்லாதது என்பதற்கான எபிரெய வினைச்சொல் **ரா**. ஆதி 6:5. பூமி முழுவதும் **ரா** நிறைந்திருந்ததால், தாம் பூமியை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். ஆதி 6:6,7.

தேவனுடைய மனஸ்தாபத்தில் இரட்சிப்பின் நோக்கங்களும் அடங்கியிருந்தன. 'மனஸ்தாபம்' என்பதற்கான எபிரெயச் சொல் **நகாம்**; நோவா என்பதற்கான எபிரெயச் சொல் **நோக்**. இரண்டின் உச்சரிப்பும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் உள்ளன. **நோக்** என்றால் 'தேறுதல்' என்று அர்த்தம். ஆதி 5:29. எனவே இந்தப் பொல்லாப்பை தேவன் அணுகிய விதத்தில் இரண்டு நோக்கங்கள் சம்பந்தப்பட்டிருந்தன. ஒன்று, ஆக்கினைத் தீர்ப்பு; அதனால் சிலர் அழிந்தார்கள். அடுத்தது, ஆறுதலும் இரக்கமும் தருகிற விடுதலைத் தீர்ப்பு; அதனால் சிலர் இரட்சிக்கப்பட்டார்கள்.

இதே 'இருவித நோக்கங்களோடுதாம்' ஆபேல்/சேத்தோடும் காயீனோடும் செயல்பட்டார்; 'தேவ குமாரர்களாகிய' சேத்தின் வம்சத்தாரிடமும், 'மனுஷ குமாரர்களாகிய' காயீனின் வம்சத்தாரிடமும் இதே 'இருவித நோக்கங்களோடுதாம் செயல்பட்டார்; அப்படியே நோவாவோடும் பிற மனிதர்களோடும் இதே இருவித நோக்கங்களோடுதாம் செயல்பட்டார்.

*2021, ஏப்ரல் 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஜலப்பிரளயத்திற்கு ஆயத்தம்

**ஆரம்பக்கால வரலாற்றின் பிரமிப்பூட்டும் இந்தச் சம்பவத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? ஆதி 6:13–7:10.**

தானியேலைப்போல நோவாவும் உலகமுடிவைக்குறித்து முன்னுரைத்த ஒரு தீர்க்கதரிசி. 'பேழை' என்பதற்கான எபிரெய வார்த்தை **டெவா**. ஆதி 6:14. இது ஒரு எகிப்திய வார்த்தை; அரிதாகப் பயன்பட்ட பிறமொழி வார்த்தைகளில் இதுவும் ஒன்று. எகிப்தியரிடமிருந்து இஸ்ரவேலரைக் காப்பாற்றவிருந்த மோசேயை அவன் குழந்தையாக இருந்தபோது, ஒரு நாணற்பெட்டியில் மறைத்து வைத்தார்கள். அதாவது, **டெவாவில்** மறைத்துவைத்தார்கள். யாத் 2:3.

மேலும், பேழையின் கட்டமைப்பு ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த உடன்படிக்கை பேழையோடு சற்றே ஒத்திருந்தது. யாத் 25:10. ஜலப்பிரளய பேழையானது மனுக்குலம் பிழைக்க உதவியது; அதுபோல, தேவ மக்கள்மத்தியில் அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக இருந்த உடன்படிக்கை பேழையும் தேவன் தம் மக்களை இரட்சிக்கச் செய்த கிரியைகளைச் சுட்டிக்காட்டியது. யாத் 25:22.

ஜலப்பிரளயச் சம்பவமானது பேழையை தேவன் 'உண்டு பண்ணச்' சொன்ன கட்டளையுடன் தொடங்குகிறது. ஆதி 6:14. உண்டுபண்ணு என்பதற்கான வினைச்சொல் **ஆஸாஹ்**. அந்த வார்த்தை ஐந்துமுறை வருகிறது. ஆதி 6:14-16. 'தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்' என்று ஆதி 6:22 முடிகிறது. 'செய்துமுடித்தான்' என்பதற்கான வினைச் சொல்லும் **ஆஸாஹ்**; தேவ கட்டளையிட்டபடி, நோவா செய்துமுடித்தான் என்பது, தேவனுக்கு நோவா முழுதும் கீழ்ப்படிந்ததைக் காட்டுகிறது. உடன்படிக்கைப் பெட்டி செய்யச் சொன்ன சம்பவத்திலும் இதே வார்த்தைகள்தாம் வருகின்றன. யாத் 39:32,42; யாத் 40:16.

'தேவன் நோவாவுக்கு பேழையின் சரியான அளவுகளையும், அதன் கட்டுமானம் சம்பந்தமான ஒவ்வொன்றையும் குறித்த பிரத்தியேக கட்டளைகளையும் கொடுத்தார். அவ்வளவு வலிமையான, நீடித்து உழைக்கிற ஒரு கட்டமைப்பை மனிதர்கள் தங்கள் ஞானத்தால் செய்திருக்கவே முடியாது. தேவனே அதை வடிவமைத்தார்; நோவா அதை கச்சிதமாகக் கட்டிமுடித்தான்'.

இரண்டு 'பேழைகளும்' மீட்பின் நோக்கத்தோடு அமைக்கப்பட்டதை இரண்டுக்கும் இடையேயான ஒற்றுமை உறுதிப்படுத்துகிறது. தேவனுடைய மீட்பின் திட்டத்தில் நோவாவின் கீழ்ப்படிதல் முக்கியப் பங்காற்றியது. தேவன் தன்னிடம் சொன்னதை எல்லாம் செய்ய விசுவாசம் இருந்ததால்தான் நோவா இரட்சிக்கப்பட்டான். எபி 11:7. கீழ்ப்படிதலால் விளைகிற விசுவாசத்திற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தான்; அத்தகைய விசுவாசமே மெய்யான விசுவாசம். யாக் 2:20.

**'நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது' என்பது உண்மைதான். ஆதி 6:8. அந்தக் கிருபையால்தான், அவன் உண்மையுடன் செயல்பட்டு, தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடிந்தது. நாம்எப்படி நடக்கவேண்டும்?**

---

**நோவாவின் குடும்பத்தார்மட்டுமே இரட்சிக்கப்பட்டதின் காரணம் என்ன? 2பேதுரு 2:5–9. வரவிருக்கிற நியாயத்தீர்ப்புபற்றி உலகத்தை எச்சரிப்பதில் நம் பங்கை உணர்ந்துகொள்ள, நோவா அனுபவத்திலிருந்து என்ன பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம்?**

# ஜலப்பிரளயம்

நோவா பேழையை 'உண்டுபண்ணினான்'; இதற்கான எபிரெயச்சொல் **ஆஸாஹ்** என்று பார்த்தோம்; ஆதியாகமச் சிருஷ்டிப்பு சம்பவத்திலும் இது முக்கிய வார்த்தையாக வருகிறது. ஆதி 1:7,16,25,26,31; ஆதி 2:2. நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்து செய்தவை, சிருஷ்டிப்பில் தேவன் செய்தவற்றிற்கு ஒத்திருந்தன. எனவே ஜலப்பிரளயத்தில் தேவன் அந்த மக்களைத் தண்டிப்பதற்காகமட்டும் செயல்படாமல், நம்மை இரட்சிக்கவும் செயல்பட்டதைப் பார்க்கமுடிகிறது.

**ஜலப்பிரளயம்குறித்த சம்பவம் எவ்வாறு சிருஷ்டிப்பு சம்பவத்தை ஞாபகப்படுத்துகிறது? ஆதி 7. இரண்டு சம்பவங்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

ஜலப்பிரளயச்சம்பவத்தை கவனமாக வாசித்தால், சிருஷ்டிப்புச்சம்பவத்தில் வருகிற பல வார்த்தைகளும் சொற்றொடர்களும் இதிலும் வருவது தெரியும்.

- **ஏழு.** ஆதி 7:2,3,4,10; ஒப்பிடவும் ஆதி 2:1-3.
- **ஆணும் பெண்ணும்.** ஆதி 7:2,3,9,16; ஒப்பிடவும் ஆதி 1:27.
- **ஜாதிஜாதியான.** ஆதி 7:14; ஒப்பிடவும் ஆதி 1:11,12,21,24,25.
- **மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள்.** ஆதி 7:8,14,21,23; ஒப்பிடவும் ஆதி 1:24,25.
- **ஜீவசுவாசம்.** ஆதி 7:15,22; ஒப்பிடவும் ஆதி 2:7.

ஜலப்பிரளயச் சம்பவமானது ஓரளவுக்கு சிருஷ்டிப்புச் சம்பவம்போல இருக்கிறது. சிருஷ்டிக்கிற அதே தேவன்தாம் அழிக்கிறவராகவும் இருப்பதை அந்த ஒற்றுமைகள் சுட்டிக்காட்டுகின்றன. உபா 32:39. ஆனால் இந்த ஒற்றுமைகள் நம்பிக்கையின் செய்தியையும் அறிவிக்கின்றன; அதாவது ஜலத்திலிருந்து புதியதொரு சிருஷ்டிப்பைக் கொண்டுவரவே ஜலப்பிரளயத்தை வரச்செய்தார்; அதனால் புதிய வாழ்வு கிடைக்கவிருந்தது.

தண்ணீர் எங்கிருந்தெல்லாம் வந்தது என்பது ஆதி 1இன் சிருஷ்டிப்பு சம்பவம் தலைகீழாக நிகழ்வதைக் காட்டுகிறது. ஆதி 1இல், ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்தையும் மேலே இருக்கிற ஜலத்தையும் பிரித்தார். ஆதி 1:7. ஆனால் ஜலப்பிரளயம் இரண்டு ஜலத்தையும் அவற்றின் எல்லைகளைத் தாண்டி, மீண்டும் இணையச் செய்தது. ஆதி 7:11.

இது முரணான ஒரு செய்தியை முன்வைக்கிறது. அதாவது, புதிதாக ஒன்றைச் சிருஷ்டிப்பதற்கு ஏற்கனவே இருந்த ஒன்றை தேவன் அழிக்கவேண்டியதாயிற்று. புதிய பூமியைச் சிருஷ்டிப்பதற்கு பழையதை அழிக்கவேண்டியதாயிற்று. ஜலப்பிரளய நிகழ்வானது, முடிவுகாலத்தில் உலகம் இரட்சிக்கப்படுகிற நிகழ்வுக்கு முன்னடையாளமாக இருக்கிறது. 'நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று'. வெளி 21:1; ஒப்பிடவும் ஏசா 65:17.

**நாம் புதிதாகச் சிருஷ்டிக்கப்படும்படி நமக்குள்ளாக எது அழிக்கப்பட வேண்டியுள்ளது? ரோமர் 6:1-6.**

# ஜலப்பிரளயம் முடிதல்

ஜலப்பிரளயத்தின் கடும் அழிவுகளை ஆதி 7:22-24 விவரிக்கிறது. 'உயிருள்ள வஸ்துக்கள் யாவும்' அழிந்தன; 'ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது'. ஆதி 7:23,24. இவ்வாறு எல்லாமே அழிந்து, நம்பிக்கையே இல்லாத சூழ்நிலை நிலவிய சமயத்தில்தான் 'தேவன் நினைத்தருளினார்'. ஆதி 8:1. ஜலப்பிரளயம் பற்றிச் சொல்கிற பகுதியில், சரியாக நடுவில் இந்த வார்த்தைகள் வருகின்றன; எனவே, அதுவே ஜலப்பிரளய சம்வத்தின் முக்கியச் செய்தி என்பது தெரிகிறது.

**தேவன் 'நோவாவை' நினைத்தருளினார் என்பதின் அர்த்தம் என்ன? ஆதி 8:1.**

---

'நினைவுகூருதல்' என்பதற்கான எபிரெய வார்த்தை சகார்; அதற்கு, தேவன் மறக்கவில்லை என்று அர்த்தம்; மனதளவில் மட்டும் மறக்கவில்லை என்று அர்த்தமல்ல. தம் வாக்குறுதியை நிறைவேற்றவும், இரட்சிக்கவும் மறக்கவில்லை என்று அர்த்தம். ஆதி 19:29. அந்தப் பொருளில்தான் 'தேவன் நினைவுகூருகிறார்' என்று வேதாகமம் சொல்கிறது. ஜலப்பிரளயத்தின்போது, 'தேவன் நினைத்தருளினார்' என்றால், ''தண்ணீர் நின்றுபோயிற்று; நோவா பேழையிலிருந்து வெளியேற வழியுண்டானது'' என்று அர்த்தம். ஆதி 8:2,16.

நோவா செயல்படுகிறான்; சூழ்நிலையை அறிந்துகொள்ள முதலாவது ஒரு காகத்தை அனுப்புகிறான்; பிறகு ஒரு புறாவை அனுப்புகிறான். இறுதியாக, புறா திரும்பி வரவில்லையெனக் கண்டபோது, 'பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப் போயிற்று' என்று அறிந்துகொள்கிறான்; 'நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான்'. ஆதி 8:13.

நோவா நடந்துகொண்ட விதத்தில் நடைமுறை பாடங்கள் உள்ளன. தேவன் நம்மிடம் நேரடியாகப் பேசாவிட்டாலும், நாம் அவர்மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். அதேநேரம், விசுவாசம் இருந்தால், யோசித்துச் சோதித்தறிவது முக்கியமல்ல என்று அர்த்தமல்ல. விசுவாசத்தைக் காரணங்காட்டி, கற்றுக்கொண்டதைச் சோதிக்காமலும் யோசிக்காமலும் தேடாமலும் இருக்கக்கூடாது.

ஆனாலும், தேவன் சொன்ன பிறகுதான் நோவா வெளியே புறப்படுகிறான். ஆதி 8:15-19. வெளியே சென்றாலும் ஆபத்தில்லை என்று அறிந்தாலும்கூட, தேவனையே சார்ந்திருக்கிறான்; தேவன் சொல்லும்வரை காத்திருக்கிறான். பேழைக்குள்ளேயே பொறுமையாகக் காத்திருந்தான். 'தேவன் கட்டளையிட பேழைக்குள் சென்றான்; அதுபோல அங்கிருந்து புறப்படவும் அவருடைய கட்டளைகளுக்காகக் காத்திருந்தான். இறுதியில் ஒரு தூதன் பரலோகத்திலிருந்து வந்து, அந்த இராட்சதக் கதவைத் திறந்தான்; அந்தக் கோத்திரப்பிதாவையும் அவன் குடும்பத்தாரையும் வெளியே செல்லவும், உயிரினங்கள் யாவையும் தங்களோடு அழைத்துச் செல்லவும் கட்டளையிட்டான்'.[1]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 105.

---

**ஆதி 8:1; 19:29; சங் 106:5 ஆகிய வசனங்களை வாசியுங்கள். 'தேவன் நினைவுகூருகிறார்' என்பதின் பொருள் என்ன? தேவன் உங்களை 'நினைவுகூருவதை' எவ்வாறெல்லாம் காண்பித்திருக்கிறார்?**

# உடன்படிக்கை: பகுதி 1

அது வாக்குத்தத்த உடன்படிக்கை நிறைவேறுகிற தருணமாக இருந்தது. 'உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடேகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள்' என்றார். ஆதி 6:18. தேவன் அழிக்கப்போவதாக ஆதி 6:17இல் எச்சரித்தார்; பிறகு, அவர்கள் வாழும்படி உடன்படிக்கை செய்கிறார்.

**பேழையிலிருந்து வெளியே சென்றதும் நோவா செய்தது என்ன? ஆதி 8:20. ஏன்?**

---

ஆதாமும் ஏவாளும் ஆறுநாட்களின் சிருஷ்டிப்புக்கு பிறகு, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததுபோல, நோவா ஜலப்பிரளயம் முடிந்ததும் தேவனைத் தொழுதான்; அதுவும் ஒருவகையில் ஒரு சிருஷ்டிப்புதான். ஆனாலும் இந்த இரண்டு தொழுகையிலும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஆதாமும் ஏவாளும் தேவனை நேரடியாகத் தொழுதார்கள்; நோவா பலிசெலுத்தி, தொழுதான். வேதாகமத்தில் அங்குதான் முதன்முதலாக பலிபீடம்பற்றிச் சொல்லப்படுகிறது. 'தகனபலி' செலுத்தினான். அதற்கான எபிரெய வார்த்தை **ஓலா**. பழங்காலத்தில் அந்தப் பலியையே அதிகம் செலுத்தினார்கள். நோவா, தன்னைக்காப்பாற்றின சிருஷ்டிகருக்கு நன்றிசெலுத்தும் வகையில், அதை நன்றிபலியாகச் செலுத்தினான். ஒப்பிடவும் எண் 15:1-11.

**ஜலப்பிரளயம் உணவுப்பழக்கத்தில் என்ன தாக்கத்தை உண்டாக்கியது? ஆதி 9:2-4. தேவன் அவ்வாறு கட்டளையிட்டதின் பின்னணியில் உள்ள நியதி என்ன?**

---

ஜலப்பிரளயம் அனைத்தையும் அழித்துப்போட்டதால், முன்பு போல தாவர வகை உணவுகள் கிடைக்கவில்லை. எனவே மனிதர்கள் மிருகமாம்சங்களை உண்ண தேவன் அனுமதித்தார். இந்த உணவுப்பழக்க மாற்றம், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையேயான உறவில் மாற்றத்தை உண்டுபண்ணியது; சிருஷ்டிப்பின்போது அப்படி இல்லை. சிருஷ்டிப்பு சம்பவத்தின்படி, மனிதர்களும் மிருகங்களும் தாவர வகை உணவுகளையே உண்டனர்; ஒருவருக்கொருவர் அச்சுறுத்தலாக இருக்கவில்லை. ஜலப்பிரளயத்திற்கு பிறகு, மிருகங்களைக் கொன்றதால் அந்த உறவில் பயமும் அச்சுறுத்தலும் கலந்தது. ஆதி 9:2. இவ்வாறு ஒருவரை ஒருவர் உணவாக உண்டதால், ஏதேனில் அவர்கள் அனுபவித்து மகிழ்ந்த உறவு போய், வித்தியாசமான ஓர் உறவு உண்டானது.

---

**இரண்டு கட்டுப்பாடுகளின் பேரில் தேவன் இதை அனுமதித்திருந்தார். முதலாவது, எல்லா மிருகங்களையும் உணவாக உட்கொள்ள முடியாது. இந்த முதல் கட்டுப்பாட்டை 'சுத்தமான' மிருகங்களையும், 'அசுத்தமான' மிருகங்களையும் வேறுபடுத்தியதில், மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்; இது சிருஷ்டிப்பு அமைப்பின் ஒரு பகுதி. ஆதி 8:19,20; ஒப்பிடவும் ஆதி 1:21,24. இரண்டாவது கட்டுப்பாடு, வெளிப்படையானது; புதிது; அதாவது, இரத்தம் புசிக்கக்கூடாது என்பது. ஏனென்றால், மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருந்தது. ஆதி 9:4.**

---

# உடன்படிக்கை: பகுதி 2

**ஆதி 8:21-9:1இல், உயிர்களைப் பாதுகாக்க தேவன் உறுதி பூண்டதிலுள்ள முக்கியத்துவம் என்ன? அதை தேவ ஆசீர்வாதம் எவ்வாறு நிறைவேறச் செய்கிறது?**

தேவன் தம் கிருபையால் உயிர்களைப் பாதுகாக்க உறுதிபூண்டார்; மனிதர்களுடைய புண்ணியங்கள் அதற்கு காரணமல்ல. மனிதர்களுடைய பொல்லாப்புக்கு மத்தியிலும் வாழ்க்கையைப் பாதுகாக்கத் தீர்மானித்தார். ஆதி 8:21. 'பூமியுள்ள நாளளவும்' பாதுகாக்கத் தீர்மானித்தார். ஆதி 8:22. அதாவது இந்தப் பூமி இருக்கிற வரையிலும் பருவகாலங்கள் தொடரும் என்றும், வாழ்க்கை இருக்கும் என்றும் சொன்னார். அதாவது, தேவன் தம் சிருஷ்டிப்பைக் கைவிடவில்லை.

தேவன் ஆசீர்வதித்த செயல், சிருஷ்டிப்பின்போது அவர் ஆசீர்வதித்த செயலை ஞாபகப்படுத்துகிறது. ஆதி 1:22,28; 2:3. மனுக்குலம் புதிதாக வாழ்க்கையைத் தொடருவதற்கு தேவன் ஒரு வாய்ப்பைக் கொடுத்தார்.

**வானவில்லின் முக்கியத்துவம் என்ன? ஆதி 9:8-17. இந்த 'உடன்படிக்கை அடையாளம்' எவ்வாறு மற்றொரு உடன்படிக்கை அடையாளமான ஓய்வுநாளுடன் சம்பந்தப்பட்டுள்ளது? ஆதி 9:13.**

'உடன்படிக்கையை ஏற்படுத்துதல்' என்கிற சொற்றொடர் மூன்றுமுறை வருகிறது. ஆதி 9:10,11,17. தேவன் முதன்முதலாக அவர்களோடு செய்த உடன்படிக்கையை இப்போது நிறைவேற்றுகிறார். ஆதி 6:18. முந்தின பகுதி, ஆறாம் நாள் சிருஷ்டிப்பு சம்பவத்திற்கு ஒத்திருப்பதுபோல, இந்தப் பகுதி சிருஷ்டிப்பின் ஏழாம் நாள் சம்பவமான ஓய்வுநாளுக்கு ஒத்திருக்கிறது. இந்தப் பகுதியில் 'உடன்படிக்கை' எனும் வார்த்தை ஏழுமுறை வருகிறது; அதாவது ஓய்வுநாளுடன் ஒத்திருக்கிறது. ஓய்வுநாளைப்போல வானவில்லும் உடன்படிக்கையின் ஓர் அடையாளமாகும். ஆதி 9:13,14,16; ஒப்பிடவும் யாத் 31:12-17. மேலும், ஓய்வுநாளைப்போல வானவில்லும் உலகளாவிய நோக்கமுடையது; எல்லாருக்கும் பொருந்தக்கூடியது. சிருஷ்டிப்பின் அடையாளமான ஓய்வுநாள் எங்குமுள்ள எல்லாருக்கும் உரியதுபோல, இனி உலகளாவிய வெள்ளம் வரப்போவதில்லை என்கிற வாக்குறுதியும் எங்குமுள்ள எல்லாருக்கும் உரியதாகும்.

**அடுத்தமுறை நீங்கள் வானவில்லைப் பார்க்கும்போது, தேவன் நமக்கு வாக்குரைத்துள்ள அனைத்தையும் சிந்தியுங்கள். அந்த வாக்குறுதிகளை நாம் ஏன் நம்பலாம்? அவை நிச்சயம் நிறைவேறும் என்பதை வானவில் எவ்வாறு காட்டுகிறது?**

# மேலும் படிக்க:

ஜலப்பிரளயத்திற்குமுன் இருந்த மக்களின் நிலையையும் நடத்தையையும் இன்றைய மக்களுடைய நிலையோடும் நடத்தையோடும் ஒப்பிடும்போது ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். துன்மார்க்கம் என்பது புதிய நிகழ்வல்ல. அவர்களுடைய காலத்திற்கும் நம்முடைய காலத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமையைக் கவனியுங்கள்.

'ஜலப்பிரளயத்திற்குமுன் தேவகோபத்திற்கு காரணமாக இருந்த அதே பாவம் இன்றும் நிலவுகிறது. தேவபயம் மனிதர்களின் இருதயங்களிலிருந்து மறைந்தது; அவரது பிரமாணத்தில் அக்கறையில்லாமலும் அவமதிப்போடும் நடந்தார்கள். அன்றைய தலைமுறையினரிடம் உலகப்பற்று எவ்வளவு தூரம் இருந்ததோ அதேபோல் இன்றைய தலைமுறையினரிடமும் உள்ளது. ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த ஜனங்கள் புசித்து, குடித்ததற்காக தேவன் அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை. இந்த ஈவுகளைக் கொடுத்தவர்மேல் நன்றிகாட்டாததும், கட்டுப்பாடின்றி அவற்றை நுகர்ந்து, தங்களைச் சீர்கெடுத்ததுமே பாவமாக இருந்தது. திருமணம்செய்வது நியாயம்தான். திருமணம் தேவனுடைய ஓர் ஏற்பாடு; அது அவர் நியமித்த ஆதி ஏற்பாடுகளில் ஒன்று. அந்த நியமனம்குறித்து விசேஷித்த வழிகாட்டல்களைக் கொடுத்தார்; அதைப் பரிசுத்தத்தாலும் சௌந்தர்யத்தாலும் அலங்கரித்தார். ஆனால் அந்த வழிகாட்டல்களை மறந்தார்கள்; திருமணத்தைப் புரட்டி, தங்கள் இச்சையை நிறைவேற்றப் பயன்படுத்தினார்கள். அதேபோன்ற நிலைமையே இன்று உள்ளது. நியாயமான விஷயங்களைக்கூட மிதமிஞ்சியதாக மாற்றுகிறார்கள். சாதாரண மக்களிலிருந்து அதிகாரிகள் வரை பொய், லஞ்சம், களவு போன்றவை கொஞ்சமும் கட்டுப்பாடின்றி காணப்படுகின்றன. ஒழுக்கம் விரும்பா மனநிலை எல்லா நாடுகளிலும் ஊடுருவியுள்ளது; அது அவ்வப்போது வெளிப்பட்டு உலகத்தை நடுங்கச்செய்கிறது; மட்டுமீறிய இச்சைகளும் ஒழுங்கின்மையுமே அதற்கு பின்னணியில் உள்ளன; அவற்றைக் கட்டுப்படுத்தாமல் விட்டால், பூமியை வேதனையாலும் அழிவாலும் நிறைத்துவிடும். ஜலப்பிரளயத்திற்கு முந்தின உலகம் குறித்து வேதாகமம் முன்வைக்கிற காட்சியானது இன்றைய சமுதாயம் விரைந்து கொண்டிருக்கிற நிலையையும் சுட்டிக்காட்டுகிறது. இன்று, இன்றைய தலைமுறையில், கிறிஸ்தவ நாடுகளிலும்கூட பண்டைய உலகத்தார் அழியக் காரணமாக இருந்த கொடும் பாவங்களைச் செய்து வருகிறார்கள்'.[1]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, pp. 101, 102.

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த சமுதாயத்திற்கும், நம் சமுதாயத்திற்கும் இடையே உள்ள சில பொதுவான தன்மைகள் யாவை? அந்தப் பொதுவான தன்மைகள் தேவ கிருபைபற்றிப் போதிப்பது என்ன? அதாவது, இவற்றிற்கு மத்தியிலும் அவர் உலகத்தை நேசிப்பதையும், தம்மால் முடிந்தவர்களை எல்லாம் இரட்சிப்பதையும் பற்றிப் போதிப்பது என்ன?*

2 *நோவாகால ஜலப்பிரளயம் அந்தப் பகுதியில் மட்டும் நிகழ்ந்ததாக சிலர் சொல்கிறார்கள். இந்தக் கருத்து ஏன் தவறானது? அது உண்மை என்றால், ஒவ்வொரு பகுதியிலும் வெள்ளம் வருவதும், வானவில் உண்டாவதும் எவ்வாறு தேவனைப் பொய்யராக்கும்?*

# உண்மையுள்ள தாத்தா பாட்டி

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

மத்திய ஆப்ரிக்காவில், தங்கள் மக்காளச்சோள வயலில் வேலைபார்த்துவிட்டு, ரெய்னெகெ என்பவரின் குடும்பத்தினர் இரவு உணவுக்காக வீட்டில் கூடியிருந்தார்கள். அம்மாவும் அப்பாவும் ஏழு ஆண்பிள்ளைகளும் நான்கு பெண்பிள்ளைகளும் தினமும் இவ்வாறு கூடிச் சாப்பிடுவார்கள். பொதுவாக, உருளைக்கிழங்கு, பூசணி, இறைச்சி ஆகியவைதாம் அவர்களுடைய உணவு. பிறகு பிள்ளைகள் பாத்திரங்களைக் கழுவுவார்கள். கடைசியாக, அப்பா வேதாகமத்தைத் திறந்துவைத்து குடும்ப ஜெபம் நடத்துவார்.

ஒருநாள் இரவு அப்பா வேதாகமத்திலிருந்து, யாத் 20:8–10 பகுதியை வாசித்தார். பிறகு, "கவனமாகக் கேளுங்கள். ஆறுநாளும் வேலைசெய்து ஏழாம்நாளில் ஓய்ந்திருக்கும்படி வசனம் சொல்கிறது" என்று சொன்னார். ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கவேண்டும் என்று முதன்முதலாக இப்போதுதான் அறிந்துகொண்டார். ஏனென்றால், அவர்கள் குடும்பமாக வாரத்தின் முதல் நாளில்தான் ஆலயத்திற்குச் செல்வதுண்டு.

பிறகு வேதாகமத்தின் பக்கவாட்டில், 'ஆறுநாட்களும் நீ வேலைசெய்து' என்கிற பகுதிக்கு நேராக 'உழவேண்டிய நேரம்' என்றும், 'ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக' என்கிற பகுதிக்கு நேராக 'ஓய்ந்திருக்கவேண்டிய நேரம்' என்றும் அப்பா எழுதினார். வேதாகமம் சொல்வதை தெளிவாகப் புரிந்துகொண்டார். அவர்கள் குடும்பமாக ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்ள ஆரம்பித்தார்கள். பிறகு, பக்கத்து பண்ணைக்காரர்களில் மூன்று பேர் ஓய்வுநாளைக் கைக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

காலம் கடந்தது. செவந்த்–டே அட்வென்டிஸ்ட் புத்தக ஊழியர் ஒருவர் அவர்களுடைய பண்ணைக்குச் சென்றார். 'தேவன் மனிதனோடு செய்த உடன்படிக்கை' என்கிற தலைப்பில் எழுதப்பட்ட டச்சுமொழி புத்தகம் ஒன்றை அப்பாவிடம் விற்றார்.

அந்தப் புத்தகத்தின் மூலம், செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைபற்றி அம்மாவும் அப்பாவும் அறிந்துகொண்டார்கள். ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கிற வேறு மக்களும் இருப்பது புரிந்தது.

அம்மாவும் அப்பாவும் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபையில் சேர்ந்தார்களா இல்லையா என்பது தெரியவில்லை; ஆனால், அவர்களுடைய 11 பிள்ளைகளில் 4 பேர் செவந்த்–டே அட்வென்டிஸ்டுகளாக மாறினார்கள். அவர்களுடைய பேரப்பிள்ளைகளில் ஒருவர்தான் கிதியோன் ரெய்னெகே; தென் ஆப்ரிக்கா ஊழியப்பணிகளின் மேற்பார்வையாளராகவும், தென் ஆப்ரிக்கா–இந்தியப் பெருங்கடல் டிவிஷனைச் சேர்ந்து வேறு 14 நாடுகளின் ஊழியப்பணி செயலாளராகவும் இருக்கிறார்.



தானும் தன் குடும்பமும் அட்வென்டிஸ்டுகளாக மாறினதற்கு தன்னுடைய தாத்தா பாட்டிகள்தாம் காரணம் என்று கிதியோன் சொன்னார். 1920 களில் அவர்கள் வேதாகமத்தை வாசித்து, வேதாகமம் சொல்கிறபடியே கீழ்ப்படியத் தீர்மானித்தார்கள். "இந்தச் சம்பவத்தை நாங்கள் சந்ததிதோறும் சாட்சியாகச் சொல்வதால், இன்னும் அநேகர் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்படுவார்கள் என்று விசுவாசிக்கிறோம்" என்று சொன்னார்.